**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No. 456/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 2 |
| Name | : அங்குத்தாய், வயது 59 |
| Father Name/Husband Name | : அம்புரோஸ் |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of July 2026.

**(Accused present).**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். சிறப்பு உதவி ஆய்வாளர் நிர்மலா மற்றும் உதவி ஆய்வாளர்கள் கமலாதேவி மற்றும் செந்தில்வேல் முருகன் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 28.04.2025 ஆம் தேதி 22.00 மணிக்கு மேறப்டி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது வாதி முத்துபாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.195/2025 BNS பிரிவுகள் 296(b), 118(1), 126(2) ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **(அந்த புகார்மனு அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை மேற்படி உதவி ஆய்வாளர் கமலாதேவி பார்வைக்கும் வைத்தார். மேற்படி வழக்கை மேற்படி உதவி ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 28.04.2025 ஆம் தேதி 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று

சாட்சிகள் மதன்குமார் மற்றும் செல்வகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். பின்பு எதிரி அழைப்பாணையின் பேரில் நிலையத்தில் ஆஜரானதால் கைது நடவடிக்கை இல்லை. பின்பு மேற்படி உதவி ஆய்வாளர் பணி மாறுதலில் சென்றதால் மேற்படி வழக்கை மேற்படி உதவி ஆய்வாளர் திரு. செந்தில்வேல் முருகன் அவர்கள் மேல் விசாரணை செய்தபோது மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியது போல் அவரிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. சான் மாதுரி என்பவரை விசாரித்து அ.சா.1 ன் காயச்சான்றை பெற்றுள்ளார். (**அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் விசாரணையை முடித்து 19.05.2025 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

4.நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் புகார்தாரர் புகார் கொடுத்ததாகவும் சொல்வதும் அதனை பெற்று நிலைய காவலர் வழக்கு பதிவு செய்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5. சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

6.வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.